TNTS120002402016



Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Shencottah.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commenc e ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 02.01.12 | 02.01.12 | AB | 24.01.12 | 03.01.22 | 11.04.26 | 06.06.26 |
| C.S.D.24.01.12 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.04.02.16 | | | | | | |
| D.Cogni.01.03.16 | | | | | | |
| A.P.D. 03.06.16 | | | | | | |

CC 157/2016 on the file of the Judicial Magistrate of Shencottah.

Complainant: The Sub Inspector of Police, Shencottah P.S in Cr.No.06/2012

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| 1. Yovan | – | Devasahayam |
| 2. Suhashini | – | Yovan |
| 3. Rajaram | – | Krishnasamy |
| 4. Amutha (Died) | – | – |

| Caste or Religion | Calling | Residence | STATION |
|---|---|---|---|
| Hindu | Coolie | Thiruvalluvar Thirumana mandapam side, Rajapalayam. | Shencottah |

**Offence** : Sections 452, 506(i) IPC

**Sentence** : A4 died. A1 is not found guilty U/s.452, 506(1) IPC ; A2, A3 are not found guilty U/s.452 IPC and the A1 to A3 acquitted U/s 271(1) of BNSS.,

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.06 17:18:43 +0530

Judicial Magistrate,
Shencottah.

TNTS120002402016



நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,
நீதித்துறை நடுவர்,
2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 06 ம் நாள் சனிக்கிழமை

**<u>ஆண்டுபட்டிகை வழக்கு எண்.157/2016</u>**

CNR.No.TNTS120002402016

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>செங்கோட்டை காவல் நிலையம்,<br>குற்ற எண்.6/2012 |

//எதிர்//

| | | |
|---|---|---|
| குற்றம்சாட்டப்பட்டவர்கள் | – | 1. யோவான், த.பெ.தேவசகாயம், திருவள்ளுவர் திருமண மண்டபம் அருகில், இராஜபாளையம்.<br>2. சுகாசினி, க.பெ.யோவான், திருவள்ளுவர் திருமண மண்டபம் அருகில், இராஜபாளையம்.<br>3. ராஜாராம், த.பெ.கிருஷ்ணசாமி, திருவள்ளுவர் திருமண மண்டபம் அருகில், இராஜபாளையம்.<br>4. அமுதா (இறப்பு) |
| குற்றம் சாட்டப்பட்டது | – | 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 452, 506(1), 2 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 452 |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 452, 506(1), 2 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 452 |
| தீர்மானம் | – | 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 452, 506(1)–ன் கீழும், 2, 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 452–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை |
| புகார்நாள் | – | 02.01.2012 |
| குற்றம்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நாள் | – | AB |

TNTS120002402016



| | | |
|---|---|---|
| பிணையில் சென்ற நாள் | - | 24.01.2012 |
| கோப்பு நாள் | | 04.02.2016 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | | 03.01.2022 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | | 11.04.2026 |
| தீர்ப்புரை நாள் | | 06.06.2026 |

இவ்வழக்கு 04.02.2016 ம் தேதியன்று குவிமுச பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 4 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துவிட்ட நிலையிலும், 1 முதல் 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.R.பாஸ்கர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

1. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:–**

கடந்த **02.01.2012** ம் தேதி காலை சுமார் **09.00** மணிக்கு **1** முதல் **4** குற்றஞ்சாட்டப்பட்டவர்களும், **ப.சா.1** க்கு சொந்தமான செங்கோட்டை பார்டரில் உள்ள கணேஷ் சாமில் உள்ளே போட்டோ எடுக்க வேண்டி அத்துமீறி நுழைந்ததை காவலாளி முருகையா குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் உரிமையாளர் இல்லாத நேரத்தில் சாமில் உள்ளே வராதீர்கள் என்று சொல்ல, **1** வது குற்றஞ்சாட்டப்பட்டவர், காவலாளியை பார்த்து கொலை மிரட்டல் செய்ததாக 1 ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 452, 506(1)–ன் கீழும், 2 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 452–ன் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக செங்கோட்டை காவல்நிலைய உதவி ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச கீழ் 1 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் 1 முதல் 4 குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்த நீதிமன்றத்தில்

ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச—ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. 1 முதல் 4 குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு 1 முதல் 4 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், 1ம் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 452, 506(1)—ன் கீழும், 2 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 452—ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது 1 முதல் 4 குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி, அ.சா.3, அ.சா.4 பார்வை மகஜர் சாட்சிகள், அ.சா.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர், அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:</u>

அ.சா.1 ராதாகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் ராஜபாளையத்தில் குடியிருந்து வருவதாகவும், எதிரிகளை தெரியும் என்றும், கடந்த 02.01.2012ம் தேதி செங்கோட்டை பார்டரில் எனக்கு சொந்தமான சாமில் உள்ளதாகவும், அந்த சாமில்லில் எதிரி யோவான் டிரைவராக வேலை செய்ததாகவும், சில பிரச்சனை ஏற்பட்டதால், எதிரி யோவானை வேலையிலிருந்து நிறுத்திவிட்டதாகவும், அதனால் 02..01.2012ம் தேதி ஆஜர் எதிரிகள் இருவர் மற்றும் இருவர் வந்து வாட்ச்மேனிடம் சொல்லி கேட்டை திறக்காமல் அத்துமீறி நுழைந்து போட்டோ எடுத்துள்ளதாகவும், அப்போது அ.சா.1 வெளியூரில் இருந்ததாகவும், அ.சா.1க்கு வாட்ச்மேன் தகவல் சொல்லி அ.சா.1

செங்கோட்டை காவல்நிலையத்தில் நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்ததாகவும், ப.சா.2 முருகையா அ.சா.1 னிடம் வாட்ச்மேனாக வேலை செய்ததாகவும், அவர் தற்போது இறந்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 கணேஷ்குமார், தனது சாட்சியத்தில், அ.சா.1, அ.சா.2 சித்தப்பா என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், கடந்த 02.01.2012 ம் தேதி எதிரி யோவான் மற்றும் மூவர் காரில் வந்து செங்கோட்டை பிரானூர் பார்டரில் உள்ள சாமில்லை போட்டோ எடுத்ததாக வாட்ச்மேன் முருகையா அ.சா.2 க்கு தகவல் சொன்னதாகவும், எதிரி யோவான் முதலில் என்னிடம் டிரைவராக வேலை பார்த்ததாகவும், அதன்பின்னர் அவரை வேலையைவிட்டு நிப்பாட்டிவிட்டதாகவும், அன்றையதினம் எதிரிகள் அ.சா.2 யை கேட்காமல் போட்டோ எடுத்ததுதான் பிரச்சனை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 முத்துச்சாமி, தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சுமார் 16 வருடத்திற்கு முன்பு காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் அ.சா.3 க்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 கணேசன், தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சுமார் 16 வருடத்திற்கு முன்பு காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் அ.சா.4 க்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 முருகன் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 03.01.2012 ம் தேதி 19.00 மணிக்கு செங்கோட்டை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது ராதாகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அதன் தன்மைக்கேற்ப காவல்நிலையக் குற்ற எண்.6/2012, பிரிவுகள் 452, 506(1) இதசபடி முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்ததாகவும், அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு விசாரணைக்காக ஒரு நகலை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 திரு.ஹரிகிருஷ்ணன், உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 2012ம் வருடம் செங்கோட்டை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 03.01.2012ம் தேதி முதல்நிலை காவலர் முருகன் பதிவு செய்து வைத்திருந்த காவல்நிலையக் குற்ற எண்.6/2012 வழக்கு கோப்பினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்ட 03.01.2012ம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துசாமி, கணேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் ராதாகிருஷ்ணன், முருகையா, கணேஷ்குமார், சாமி தேவர், முத்துசாமி, கணேசன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முருகன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரிகள் முன்பிணை பெற்றதால், அவர்களை கைது செய்யவில்லை என்றும், அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து 24.01.2012ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>Questioning 351(i)(b) BNSS</u>**

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக உள்ளவை குறித்து BNSS பிரிவு **351(1)(**ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார்கள். தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு என்று கூறினார்கள். 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லை என முடிக்கப்பட்டது.

## Point for determination

**7.** இந்நிலையில், 1வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 452, 506(1)–ன் கீழும், 2, 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இதச பிரிவு 452–ன் கீழும் உள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

## Appreciation of evidence

8 (i). இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்பது, கடந்த 02.01.2012 ம் தேதி காலை 09.00 மணிக்கு குற்றம்சாட்டப்பட்டவர்கள் 4 பேரும் இனோவா காரில் வந்து, புகார்தாரரின் சாமில்லில் இருந்த காவலாளி முருகையாவை மிரட்டிவிட்டு, சாமில்லிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து புகார்தாரரின் நிறுவனத்தை புகைப்படம் எடுத்தார்களா? மேற்படி குற்றம்சாட்டப்பட்டவர்களின் செயல் இதச பிரிவுகள் 452, 506(1) ன் கீழ் குற்றம் வருகிறதா? என்பதேயாகும்.

(ii) எனவே குற்றம்சாட்டப்பட்டவர்கள் நான்கு பேரும், அ.சா.1 சாமில்லிற்குள் அத்துமீறி நுழைந்தார்களா? என்பதை அரசு தரப்பில் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என பார்க்கையில், இந்த வழக்கு சம்பவம் 02.01.2016 ம் தேதி காலை 09.00 மணிக்கு செங்கோட்டையில் உள்ள அ.சா.1 சாமில்லில் வைத்து நடைபெறும்போது, அங்கு இருந்தவர் காவலாளி முருகையா என்பவர் என தெரியவருகிறது. அவர் தான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவார். மேற்படி முருகையா காவலாளி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார். அதனால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் நான்குபேரும் செங்கோட்டையில் உள்ள அ.சா.1 சாமில்லிற்குள் அத்துமீறி நுழைந்து புகைப்படம் எடுத்தார்கள் என்பதற்கு அரசு தரப்பில் இந்த வழக்கில் நேரடியான சாட்சியங்கள் இல்லை.

(iii) அதனால் இந்த வழக்கில் அரசு தரப்பில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் நான்கு பேரும் கடந்த 02.01.2012 ம் தேதி காலை 9.00 மணிக்கு அ.சா.1 சாமில்லிற்கு அத்துமீறி நுழைந்து புகைப்படம் எடுத்தார்கள் என்ற சங்கதியை சூழ்நிலை சாட்சிகள் மூலம் (Circumstantial evidence) மூலம் ஒரே Cogent ஆக நிரூபிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

இதுகுறித்து அ.சா.1 முதல்விசாரணை சாட்சியத்தில், கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> "... **கடந்த 02.01.2012 ம் தேதி செங்கோட்டை பார்டரில் எனக்கு சொந்தமான சாமில் உள்ளது. அந்த சாமில்லில் எதிரி யோவான் டிரைவராக வேலை செய்தார். சில பிரச்சனை ஏற்பட்டதால் எதிரி யோவானை வேலையிலிருந்து நிறுத்திவிட்டோம். அதனால் 02.01.2012 ம் தேதி ஆஜர் எதிரிகள் இருவர் மற்றும் இருவர் வந்து வாட்ச்மேனிடம் சொல்லி கேட்டை திறக்காமல் அத்துமீறி நுழைந்து போட்டோ எடுத்துள்ளார்கள். அப்போது நான் வெளியூரில் இருந்தேன். எனக்கு வாட்ச்மேன் தகவல் சொல்லி நான் செங்கோட்டை காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்க புகார்மனு கொடுத்தேன்...**"

அதேபோல் அ.சா.2 முதல்விசாரணை சாட்சியத்தில், கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> "...**கடந்த 02.01.2012 ம் தேதி எதிரி யோவான் மற்றும் மூவர் காரில் வந்து செங்கோட்டை பிரானுர் பார்டரில் உள்ள சாமில்லை போட்டோ எடுத்ததாக வாட்ச்மேன் முருகையா எனக்கு தகவல் சொன்னார்...**"

எனவே மேலே கண்ட அ.சா.1, அ.சா.2 ஆகியோர் சாட்சியத்திலிருந்து, குற்றம்சாட்டப்பட்டவர்கள் கடந்த 02.01.2012 ம் தேதி காலை 9.00 மணிக்கு அ.சா.1 சாமில்லிற்குள் அத்துமீறி நுழைந்து புகைப்படம் எடுத்தார்கள் என்ற விவரத்தை மேற்படி

இறந்துபோன காவலாளி முருகையா என்பவர் அ.சா.1 க்கு தகவல் சொல்லிதான், அதன்பின்பு அ.சா.1, அ.சா.2 க்கு தகவல் தெரிவித்துவிட்டு பின்பு சம்பவத்திற்கு மறுநாள் 03.01.2012 ம் தேதி வழக்கு சம்பவம் குறித்து புகார் கொடுத்ததாக தெரியவருகிறது. அதனால் அ.சா.1, அ.சா.2 ஆகியோர் சம்பவத்தினை கேள்விபட்ட சாட்சிகள் ஆவார்கள். அதனால் அ.சா.1, அ.சா.2 ஆகியோர் மேற்படி முதல்விசாரணை சாட்சியத்தில் அளித்த சங்கதிகள் Bharatiya Sakshya Adhiniyam Act பிரிவு 55 இன் கீழ் வாய்மொழி சாட்சியம் (Oral Evidence) ஏற்கத்தக்கதாக இருந்தாலும்,

(iv) அதேவேளையில் சம்பவத்தை கேள்விபட்ட சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 ஆகியோர் மேற்படி வாய்மொழி சாட்சியத்தில், குற்றம்சாட்டப்பட்டவர்கள் நான்குபேரும் சம்பவத்தின்போது அ.சா.1 சாமில்லிற்குள் அத்துமீறி நுழைந்து போட்டோ எடுத்தார்கள் என்பதை ஏற்கும்விதமாக, சம்பவத்தின்போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 சாமில்லிற்குள் நுழைந்து எடுத்த புகைப்படத்தினை (Document Evidence) நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என பார்க்கையில்,

இதுகுறித்து அ.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> “...**எனது சாமில்லில் எதிரி யோவான் எவ்வளவு தூரம் உள்ளே வந்தார் என்பதை காண்பதற்கு புகைப்படம் மற்றும் சிசிடிவி கேமரா எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை...”**

மேலும் இதுகுறித்து அ.சா.6 விசாரணை அதிகாரி குறுக்குவிசாரணையில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> “...**நீதிமன்றத்தில் போட்டோ எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்...”**

எனவே வழக்கு சம்பவத்தை கேள்விபட்ட அ.சா.1, அ.சா.2 ஆகியோர் நீதிமன்றத்தில் முதல்விசாரணையில் வாய்மொழி சாட்சியத்தின் (Oral Evidence) மூலம் குற்றம்சாட்டப்பட்டவர்கள் சம்பவத்தின்போது அ.சா.1 சாமில்லிற்குள் அத்துமீறி நுழைந்து புகைப்படம் எடுத்ததாக கேள்விபட்டதாக அளித்த சங்கதிகளை இந்நீதிமன்றம் சாட்சியத்தில் ஏற்றக்கத்தக்க வகையில் ஆவண சாட்சியமான (Document Evidence) குற்றம்சாட்டப்பட்டவர்கள் எடுத்ததாக சொல்லும் போட்டோவை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என மேற்படி அ.சா.1, அ.சா.6 சாட்சியத்தின் மூலம் நிரூபணமாகிறது. அதனால் வழக்கு சம்பவத்தினை கேள்விபட்ட சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 ஆகியோர் நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் (Oral Evidence) மூலமாக அளித்த சாட்சியத்தினை இந்நீதிமன்றம் சாட்சியத்தில் ஏற்கத்தக்க வகையில் (addmissiability) ஆவண சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் அ.சா.3, அ.சா.4 ஆகிய பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5, புலன்விசாரணை அதிகாரி அ.சா.6 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், கேள்விபட்ட சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 சாமில்லிற்குள் சம்பவத்தின்போது அத்துமீறி நுழைந்து புகைப்படம் எடுத்ததை காவலாளி முருகையா என்பவர் மூலம் கேள்விபட்டதாக கூறியதை, ஏற்கும்விதமாக இந்நீதிமன்றத்தில் ஒரே Cogent ஆக ஒத்துழைத்து மேலே கண்ட சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை. அதனால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அ.சா.1 சாமில்லிற்குள் அத்துமீறி நுழைந்து புகைப்படம் எடுத்தார்கள் என்ற சங்கதியை சூழ்நிலை சாட்சியங்கள் மூலம் ஒரே Cogent ஆக அரசு தரப்பில் Proved செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானத்திற்கு வருகிறது. அதனால் 1 முதல் 3 குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இதச பிரிவுகள் 452 குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என முடிவுக்கு வருகிறது.

(vi) அடுத்ததாக இதச பிரிவு 506(1)ன் படியான குற்றச்சாட்டு குறித்து பார்க்கையில், 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவர், அ.சா.1 ஷாமில்லிற்குள் நுழைந்து காவலாளி முருகையாவை மிரட்டியதற்கு எந்தவித சாட்சியும் இல்லாததால், 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான இதச பிரிவு 506(1)ன் படியான குற்றச்சாட்டு நிரூபிக்கவில்லை என இந்த நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

9. <u>முடிவாக</u>

**இவ்வழக்கில் 4 வது குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துவிட்டார். அவரை பொறுத்து குற்றச்சாட்டு Abated ஆகிவிட்டது. 1 வது குற்றம்சாட்டப்பட்டவர் இதச பிரிவுகள் 452, 506(1)–ன் படியும், 2, 3 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இதச பிரிவு 452–ன் படியும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

10. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

11. இவ்வழக்கில் 1 முதல் 4 குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் சி.ஆர்.எம்.பி.எண்.172/2012 ல் 10.01.2012 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி முன்பிணையில் சென்றுள்ளார்கள்.

12. பாதிக்கப்பட்ட நபர் தங்களுக்கு ஏற்பட்ட காயம் குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காததால் இந்த நீதிமன்றம் பிரிவு 396(2) BNSS படி மாவட்ட சட்டப்பணிகள் குழு மூலம் இழப்பீடு பெறுவதற்கு பரிந்துரை செய்யவில்லை.

<u>Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019</u>

| S.No. | Case No. | CC.No.157/2016 | |
|---|---|---|---|
| 1. | Name of the police station and crime number of the offence | Shencottah PS,<br>Cr.No.6/2012<br>U/s.452, 506(1) IPC | |
| 2. | Name | 1. Yovan | |

| | | | |
|---|---|---|---|
| | | 2. Suhashini<br>3. Rajaram<br>4. Amutha (Died) | Description of the Accused |
| 3. | Father's Name/Husband Name | 1. Devasahayam<br>2. Yovan<br>3. Krishnasamy<br>4. – | |
| 4. | Occupation | Coolie | |
| 5. | Residence | Thiruvalluvar Thirumana mandapam side, Rajapalayam. | |
| 6. | Age | -- | |
| 7. | Occurence | 02.01.2012 | Date of |
| 8. | Complaint | 02.01.2012 | |
| 9. | Apprehension | AB | |
| 10. | Release of bail | 24.01.2012 | |
| 11. | Commitment | -- | |
| 12. | Commencement of trial | 03.01.2022 | |
| 13. | Closure of trial | 11.04.2026 | |
| 14. | Sentence of order | 06.06.2026 | |
| 15. | Service of copy of judgement of finding on accused | Acquittal | |
| 16. | Explanation of delay | --- | |

**<u>CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C.NO.814/2020/RG/P1, DT.07.04.2021</u>**

| | | | |
|---|---|---|---|
| i. | The period of remand of the accused | : | AB |
| ii. | The date of filing of the complaint/final report in the Court | | 04.02.2016 |
| iii. | The date of committal of the case to the Court of Session | | --- |
| iv. | The date of questioning of the accused under section 228, 240, 246 and 251 fo the Code of Criminal Procedure 1973 as the case may be | | 11.10.2021 |
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on | | ---- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | challenge before superior courts:except routine petitions like petitions under section 317 of the Code: | | | | |
| vi. | Date of examination in–chief and cross–examination of witness | | PW1 | 03.11.2025 | 03.11.2025 |
| | | | PW2 | 03.11.2025 | 03.11.2025 |
| | | | PW3 | 20.01.2026 | -- |
| | | | PW4 | 20.01.2026 | -- |
| | | | PW5 | 23.02.2026 | 23.02.2026 |
| | | | PW6 | 23.02.2026 | 23.02.2026 |
| Vii. | Date of examination of the accused under section 313 of the code | | 12.03.2026 | | |
| Viii. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | | -- | | |
| ix. | Grant of stay by superior courts and the result thereof | | -- | | |

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 06 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.06 17:18:53 +0530

நீதித்துறை நடுவர், செங்கோட்டை.

**Annexure ;**

**Witnesses on the prosecution side :**

| Prosecution witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| 1 | Radhakrishnan | Complainant |
| 2 | Ganeshkumar | Hearsay witness |
| 3 | Muthusamy | Observation Mahazar |
| 4 | Ganesan | Observation Mahazar |
| 5 | Murugan | Special Sub Inspector, Shencottah P.S. |

| | | |
|---|---|---|
| 6 | Harikrishnan | Investigating Oficcer |

**Exhibits marked on the Prosecution Side :–**

| Exhibit Nos. | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|
| 1 | complaint | PW1 |
| 2 | The 1st signature of PW3 in the Observation Mahazar | PW3 |
| 3 | The 2nd signature of PW4 in the Observation Mahazar | PW4 |
| 4 | First Information Report | PW5 |
| 5 | Observation Mahazar | PW6 |
| 6 | Rough Sketch | PW6 |

**Material Objects produced on the side of Prosecution** :– Nil

**Defense side witness, documents** :– Nil

**Material Objects on the defense side :–** Nil

**குறிப்பு :–**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.
2. 1 முதல் 3 குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்பிணையில் இருந்தார்கள்.
3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.06.06 17:18:58 +0530

நீதித்துறை நடுவர், செங்கோட்டை.